# ஊர்மிளையின் உள்ளம் காட்டும் உண்மை

முனைவர். லெ. அலமேலு
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி, போடிநாயக்கனூர்.

62

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய காலகட்டத்தில் நாடக இலக்கியம் தேடப்படும் இலக்கியமாகக் கருதப்படுகிறது. பொதுவாக இலக்கியங்களை ஆழ்ந்து நோக்கி அனுபவித்து அதை சமுதாயத்திற்கு இயல், இசை, நாடகமாகத் தந்து கொண்டிருந்தனர் நம் முன்னோர்கள். இயலும் இசையும் பிடித்த இடத்தை நாடகமும் பிடித்திருக்கிறதா என்பது சிந்தனைக்குரியதாகின்றது. பண்டைய காலத்தில் நாடகம் பொழுது போக்கிற்காகவும் சமூக விழிப்புணர்விற்காகவும் நடத்தப்பட்டது. ஆனால் அதில் அதீத ஆர்வம் கொண்டு நடித்தார்கள் நாடக கலைஞர்கள். மேலும் நாடகங்கள் சமுதாயத்தில் உள்ள சிக்கல்களை மையமாக வைத்தே நடத்தப்படுகிறது. அந்த வகையில் கு.ப.ராசகோபாலன் அவர்கள் “ஊர்மிளையின் உள்ளம்” என்ற நாடகத்திலும் பெண்களின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். ஆகையால் இக்கட்டுரையானது சமூகவியல் அணுகுமுறையில் ஆராயப்படுகிறது.

**ஆய்வுக்கட்டுரை**

இன்றைய சூழலில் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் நாடக நிகழ்வு இருக்கிறது என்று கூறினால் அதை மக்கள் அலுப்பு தட்டும் விதமாகவே காண்கிறார்கள். அறிவியல் முன்னேற்றத்திலும் தகவல் தொழில் நுட்பத்திலும் இரண்டறக் கலந்த மனிதர்கள் நாடக நடிப்பினை விரும்புவதில்லை. நாடகத்தில் சிறந்த கலைஞர்கள் தான் பின்னாளில் சிறந்த நடிகராவும் புகழ் பெற்றனர் என்பதை மறக்க இயலாது.

“நாடகம் என்பது தமிழ்மொழிக்கும் தமிழுக்கும் புதிய கலையன்று. அதன் தொன்மை தொல்காப்பியருக்கும் முந்தியது எனக் கருதப்படுகிறது. நாடகக் கலையின் தெளிவான தொடர்ச்சியான வரலாறு கால முறைப்படி வளர்ச்சிப்படி நிலைகளில் நமக்குக் கிடைக்கவில்லையென்றாலும் இக்கலை வழிவழியாகத் தமிழரிடம் பயின்று வந்துள்ள மரபுக் கலை என்பது தெளிவாகிறது”.(பக்கம் 12 தமிழில் ஓரங்க நாடகங்கள்)

ஆனால் இன்று திரைப்படங்கள் உலகம் முழுவதும் வலம் வந்தாலும் அதற்கும் அடிப்படை காரணம் நாடகம் தான். இன்னும் சின்னத்திரையில் நாடக கலைஞர்களை சிறப்பு செய்து நாடகக்கலை மறைந்து விடாமல் சில நற்சான்றோர்களால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. என்னதான் முயற்சித்தாலும் இன்றைய இளைஞர்கள் நடனத்தை விரும்புவதைப் போல் நாடகத்தை விரும்புவதில்லை.

“நாடகக்கலை என்பது உலகத்தின் பொதுக்கலை”(பக்கம்1 தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்” நாடகத்தின் இயல்பையும் நோக்கத்தையும் இன்றைய இளைஞர்களுக்கு கற்றுத் தரவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இன்றைய இலக்கியத்தில் நாடகம் எப்படி இருக்கிறதோ அதே போல தான் இராமாயணத்தில் ஊர்மிளையின் பாத்திரமும் படைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் கு.ப.இராசகோபாலன் எழுதிய ஊர்மிளையின் உள்ளம் என்ற

நாடகத்தை; ஆய்விற்காக எடுத்துக் கொண்டேன். இந்நாடகம் சமூகவியல் அணுகுமுறையில் ஆராயப்பட்டு இருக்கிறது. ஊர்மிளையின் கதாப்பாத்திரத்தின் வழி அவளின் எண்ணப் போக்கினை எடுத்துரைக்கும் விதமாக இந்நாடகம் அமைந்துள்ளது. இராமாயணத்தில் இராமன், சீதை, இலக்குவன் ஆகியோரை மையப்படுத்தி பேசப்பட்டாலும் அதில் முக்கிய பாத்திரமாக இலக்குவன் இருக்கிறான். இலக்குவனின் மனைவி ஊர்மிளை எவ்விடத்திலும் முதன்மைப்படுத்தப்படவில்லை. இராமன், சீதை, இலக்குவன் ஆகியோரை முன்னிலைப்படுத்தியிருத்தாலும் ஊர்மிளையின் பாத்திரப்படைப்பினை ஓரங்கட்டியிருப்பது சிந்தனைக்குரியதாகிறது.

ஆகவே தான் ஊர்மிளையின் மனநிலையை வெளிப்படுத்தும் விதமாக இந்நாடகத்தில் இலட்சுமணன் மற்றும் ஊர்மிளையின் உரையாடல் அமைகின்றது. ஒரு சராசரிப் பெண்ணிற்கு உரிய அத்தனை எதிர்பார்ப்புகளும் ஊர்மிளைக்கும் இருந்திருக்கும் என்பதில் பெரிதாக எண்ண வேண்டியது ஒன்றுமில்லை.

காதலர் பிரிந்து செல்வதற்கு ஒப்புதல் அளித்து, அதனால் ஏற்படும் துன்பத்தைப் போக்கிக் கொண்டு பிரிந்த பின்னும் பொறுத்திருந்து உயிரோடு வாழ்பவர் பலர் இருக்கலாம் என்ற பொருளைத் தரும்.

“அரிதாற்றி அல்லல்நோய் நீக்க பிரிவாற்றிப்

பின்இருந்து வாழ்வார் பலர்” 1160

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க வாழ்ந்தவள் ஊர்மிளை.

இலக்குவன் திருமணத்திற்கு முன்பே ஊர்மிளையி;டம் பேசுகையில் “இராமனுக்கு சேவை செய்யவே இருக்கிறேன். சராசரி பெண்ணாக எதிர்பார்க்கும் ஆசையை எதிர்பார்த்தால் என்னால் எதுவும் இயலாது என்று கூறுகிறான்” ஆனாலும் விதியின் வழியில் ஊர்மிளையும் சம்மதிக்கிறாள். இராமன், சீதையுடன் இலக்குவன் காட்டிற்கு 14ஆண்டுகள் வனவாசம் செய்து மீண்டும் நாட்டிற்குள் நுழைகிறான். அச்சமயத்தில் ஊர்மிளையின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதை எளிமையாக குறுநாடகத்தில் இயல்பாக எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

ஊர்மிளையின் மனநிலையை இலக்குவனிடம் “காதலையும் கடமையையும் கட்டோடு மறப்பது விபரீதமல்லவோ” (பக்கம் 126 கு.ப.ரா.படைப்புகள்) என்று அவள் கூறுவதிலிருந்து அறிய முடிகிறது. ஊர்மிளையின் மனவேதனையானது முற்றிலும் துறந்த ஞானிபோல் இலக்குவனிடம் உரையாட வைத்தது. ஆனாலும் இடையில் ஆறுதல் கூற வந்த சீதையிடம் பேசி தன் கோபத்தை வெளிப்படுத்தினாள் ஊர்மிளை. 14 ஆண்டுகள் கழித்து வந்த கணவனிடம் இப்படிப் பேசலாமா என்று கேட்ட சீதையிடம் “உன் புருசர் உன்னைக் கண்ணெடுத்துப் பார்க்காமல் இருந்தால் நீ மனஸ்தாபந்தான் படுவாயோ? பேதையொருத்தி பெண்டு இருக்கிறாளே என்பதையே மறந்து” என்கிறாள் (பக்கம் 127 கு.ப.ரா.படைப்புகள்) மேலும்“உனக்கென்ன சொல்வதற்கு, கூடக் காட்டுக்கு வர அனுமதித்தாய், காட்டில் கொஞ்சம் கூடக் கலக்கம் இல்லாமல் அவர் சேவையை ஏற்றாய், பதிலுக்கு அவரை வாயில் வந்த வார்த்தைகளைச் சொல்லி வெகுமதித்தாய்” என்று வார்த்தையால் (பக்கம் : 127 கு.ப.ரா.படைப்புகள்) மனதிலிருப்பதைக் கொட்டுகிறாள்.

இன்று பெண்கள் தங்கள் மனதில் இருப்பதை வெளியில் வெளிப்படையாகக் கூறினால் குடும்ப அமைப்பிற்கும் சமுதாயத்திற்கும் பங்கம் வந்து விடுமோ என்று எண்ணியே மனதிற்குள்

வைத்துக் கொள்கின்றனர். இந்நிலையைக் கட்டுடைப்பதாக ஊர்மிளையை இந்நாடகத்தில் படைத்திருக்கிறார் ஆசிரியர்.

சீதை தன்னால் தான் ஊர்மிளைக்கு இந்நிலைமை என்று எண்ணி அவள் சாபம் விடாது என்று அலறியபடி ஓடுகிறாள். இலக்குவன் அண்ணியின் பின்னே செல்ல முற்படுகையில் சீதை இலக்குவனிடம், "நில்லுங்கள் இங்கேயே நீங்கள் இனிமேல் அங்கே வரக் கூடாது சுயநலத்துடன் -ஆம் அது தான் உண்மை. உங்கள் சேவையை ஏற்றேன் தண்டனை அடைந்து விட்டேன். இனி எனக்கு நிம்மதி கிடையாது. ஊர்மிளையினை குறை கூறும் முகம் என்முன் சதா நின்று என்னை வாட்டும்;" (பக்கம்: 128 கு.ப.ரா.படைப்புகள்) என்கிறாள்.

சீதை தன்னை எத்தகைய துன்பம் சூழ்ந்திருந்த போதும் இலக்குவன் ஊர்மிளை பற்றி சிந்தித்திருக்க வேண்டும் என்பதை ஆசிரியர் இவ்விடத்தில் விளக்குகிறார் நமக்கு எவ்வளவு பெரிய துன்பம் சுற்றியிருப்பினும் நம்மைச் சுற்றி இருப்பவர்களைப் பற்றியும் நமக்குச் சிந்தனை இருக்க வேண்டும். இலக்குவன் 14 ஆண்டுகள் பிரிந்திருந்த ஊர்மிளையின் உள்ளத்தைப் புரிந்து கொண்டாலும் சீதை வருத்தத்துடன் போவதைக் கண்டு வருந்துகிறான். ஊர்மிளையிடம் என்ன காரியம் செய்து விட்டாய்' என்று கோபிக்க முற்படும் பொழுது தான் ஊர்மிளை பொறுக்க முடியாமல் அழுகிறாள். அழுது கொண்டே அவள் புலம்புவதின் வாயிலாக அவளுடைய உள்ளக் குமுறல் வெளிப்படுகிறது.

"தெய்வமே! அடைந்துக் கொண்டு கிடந்தால் கூட என்மேல் பழிதானா? சுகம் கேட்டேனா, சௌகரியம் கேட்டேனா, அன்பு கேட்டேனா, ஆதரவு கேட்னோ ஒன்றும் நான் கேட்கவில்லையே! என் புருசனைக் கூட என்னுடையவர் என்று நான் கூப்பிடவில்லையே" (பக்கம் : 128 கு.ப.ரா.படைப்புகள்)

இவ்வாறு ஊர்மிளை கூறும் பொழுது சுகம், அன்பு, ஆதரவு, சௌகரியம் ஆகிய எதுவுமே தனக்குக் கிடைக்கவில்லை என்று கூறுவது புலனாகிறது. மேலும் தன் கணவனைக் கூடத் தன்னுடையவர் என்று கூற எந்த சந்தர்ப்பத்திலும் வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகிறாள். இவ்வளவு மனத்தாங்கலோடு இப்பொழுது கூட தன்னைப் பற்றி சிந்திக்காமல் தன் அண்ணியின் வருத்தத்திற்காக வருத்தப்படும் தன் கணவனைப் பற்றி எண்ணிக் கதறுகிறாள். ஆனாலும் அவள் மனமானது உறுதியுடன் எந்த உணர்வும் தனக்கில்லை என்பதை எடுத்துரைக்கிறது.

அடக்கி வைத்த தனது சோகத்தை வெளிப்படுத்தும் வார்த்தைகள் ஊர்மிளையிடமிருந்து பொங்கி வருகின்றன. இறுதியாக இலக்குவன், ஊர்மிளையிடம் உன் காலடியில் கிடக்கிறேன் யாவற்றையும் எடுத்துக்கொள் என்று மனமுருகி பேசுகின்றான். எண்ணத்தின் ஆசைகள் எல்லாம் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றம் மிஞ்சிய போதெல்லாம் அவளுடைய மனம் இறுக ஆரம்பித்திறது என்பதை ஊர்மிளை தன் வார்த்தைகளினால் வெளிப்படுத்தினாள்.

பெண்களின் மகத்துவத்தைப் பறைசாற்றும் விதமாக பெண்கள் நாட்டின் கண்கள் என்ற நாடகத்தில் டாக்டர் என்ற பாத்திரத்தின் வழியாக வசனம் எழுதப்பட்டிருக்கிறது.

"ஒரு சாதாரண பெண்ணால் இப்படிப்பட்ட மகத்தான காரியத்தை செய்ய முடியும் என்று நான் கனவில் கூட நினைக்கல. நம்ம நாட்டுக்கும் வீட்டுக்கும் இப்படி நன்மை பயக்கக்கூடிய காரியத்துல எல்லோருமே ஈடுபட்டா எந்தவித இன்னல்களையும் எதிர்த்துப் போராட முடியும் என்பதற்கிணங்க (பக்கம் : 94 பெண்களே நாட்டின் கண்கள்)

14 வருடங்கள் கழித்து இலக்குவன் முழுமனதுடன் ஊர்மிளையிடம் பேசி ஏற்றுக் கொள் என்று கூறிய பொழுது, “ஏற்றுக் கொள்ள இப்பொழுது என்னிடம் ஊக்கமும் இல்லை, உணர்வும் இல்லை நினைத்து, நினைத்து நினைப்பே போய் விட்டது. எண்ணி எண்ணி எண்ணமே அற்று விட்டது” என்று (பக்கம்: 128 கு.ப.ரா.படைப்புகள்) கூறுகிறாள் ஊர்மிளை அதே போல் “புதிய பிரவேசங்கள்”; என்ற சிறுகதையிலும் சீதையைத் தீக்குளிக்கச் சொன்ன இராமனிடம்

“இந்தத் தீக்குளிப்புக்கு ஒரு நொடியில் நான் உடன்பட்டு விடமுடியும். ஆனால் அக்கினிப்பிரவேசம் செய்து என் பெருமையைப் பறைசாற்றிக் கொள்வதை விட அதைச் செய்யாமலிருப்பதன் மூலம் எதிர்காலத்தில் என் பெயரால் எரியூட்டப்படும் என் சகோதரிகளின் எண்ணிக்கையைச் குறைக்க வேண்டும்” என்ற சீதையின் ஆதங்கக் குரல் ஒப்புநோக்கத்தக்கது. (பக்கம் : 17 புதிய பிரவேசங்கள்)

எந்த ஒரு எதிர்பார்ப்பும் நிறைவேறாமல் தொடரும் பொழுது அதை இறுதிவரை எதிர்பார்க்கக் கூடாது என்ற மனோதிடத்தை ஊர்மிளையிடம் காணமுடிகிறது. சாதாரணமாக ஆண்கள் இவ்வாறு எத்தனை வருடங்கள் பிரிந்திருந்து திரும்பவும் தங்கள் மனைவியிடம் வரும் பொழுது எந்த ஒரு வினாவும் எழுப்பாமல் கணவனுடன் சேர்ந்து வாழவேண்டும் என்பது சமூகத்தின் எதிர்பார்ப்பாகிறது. கண்மூடித்தனமாக ஒன்றில் இணைந்த வாழும்பொழுது சுயசிந்தனையற்று வாழும் சிலரில் ஒருவராக இலக்குவன் இருக்கிறான் என்பதை ஊர்மிளை இந்நாடகத்தின்வழி எடுத்துரைக்கிறாள். நாடகத்தின் இறுதியில் இலக்குவன் மற்றும் ஊர்மிளையின் உரையாடலில் ஊர்மிளையின் உள்ளம் தெள்ளத் தெளிவாக வெளிப்படுகிறது.

லட்சுமணன் : இந்த அந்தப்புரத்தில்
ஊர்மிளை : இது அந்தப்புரமல்ல இப்பொழுது
லட்சுமணன் : உன் பெண்மை
ஊர்மிளை : நான் பெண்ணல்ல இனிமேல்
லட்சுமணன் : ஊர்மிளா !
ஊர்மிளை : இந்தப் பிறப்பில் உங்களுக்கு அந்தப்புரமில்லை என்று நினைத்துக் கொள்ளுங்கள் மனைவியில்லை போங்கள்
(பக்கம்: 128 கு.ப.ரா.படைப்புகள்)

என்றிவ்வாறு நாடகம் நிறைவு பெறுகின்றது. மனத்தில் இருப்பதை வெளிப்படுத்தாத பெண்கள் இருப்பதை தங்கள் படைப்புகளில் காட்டுகின்றனர் சில ஆசிரியர்கள். பெண்களுக்குள்ளே எவ்வளவு மனஉறுதியும் அதை வார்த்தைகளாக வெளிப்படுத்தும் திறமும் இருக்கிறது என்பதை ஊர்மிளையின் பாத்திரப் படைப்பின் வழி ஆசிரியர் தெளிவாகக் காட்டியிருக்கிறார். பெண்கள் தங்கள் மனத்தில் இருப்பதைத் தைரியமாக வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆசிரியரின் மனப்போக்கும் இங்கு நன்றாக தெரிகிறது.

சமுதாயத்திற்காகவும், குடும்ப கட்டமைப்பிற்காகவும் வாழும் பெண்கள் தங்களின் உள்ளத்தில் உள்ள கருத்துக்களை எதற்கும் அஞ்சாமல் வெளிப்படுத்த வேண்டும் என்ற கருத்தும் புலனாகிறது, இக்கருத்தை வெளியிடுவதற்குச் சரியான கருவி நாடகமே என்பதை அறிந்து எழுதியிருக்கிறார் ஆசிரியர். எத்தகைய மிகப் பெரிய செய்தியையும் சில வரிகளில் சீராக எடுத்துக்

கூறிவிடலாம் என்பதற்குச் சான்றாகவும் இந்நாடகம் விளங்குகிறது.

**பார்வை நூல்கள்**


குு.ப.ரா.படைப்புகள் - அடையாளம்.
நாடகங்களும், கவிதைகளும்
1205/1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம்,
திருச்சி மாவட்டம். 2010

தமிழில் ஓரங்க நாடகங்கள் - முனைவர். ம. தெய்வானை
பாக்கியம் பதிப்பகம், 5, அப்பாவு சந்து,
சென்னை – 2. 2018

திருக்குறள் - பி.எஸ்.ஆச்சார்யா உரை
நர்மதா பதிப்பகம்,
சென்னை – 17.2016

பெண்களே நாட்டின் கண்கள் - புனர்வசு ஜெய்ஹனுமான் பிரசுரம்
10வது செக்டார், கே.கே.நகர்
சென்னை – 78.2004

புதிய பிரவேசங்கள் - எம்.ஏ.சுசீலா
தமிழ் வெளியீடு, மதுரை. 1994

தமிழ்நாடகத்தின் தோற்றமும் - முனைவர்.ஆறு.அழகப்பன் வளர்ச்சியும்
பாரி நிலையம், 90, பிராட்வே,
சென்னை – 600 108. 2013